Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

| மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 34 | உள்ளூர் - 03.02.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 54 | * Issue 34 | வெளியூர் - 04.02.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.


உச்ச நீதிமன்றத்தில் 152 காலியிடங்கள்

த.நா அரசு ஊழியர்களுக்கு அடித்த ஜாக்பாட்..!!

சத்துணவு ஊழியர்கள் வேலை நிறுத்தம்!

நகைக்கடன் தள்ளுபடி.. பறந்த முக்கிய உத்தரவு..!!

## நெருங்கும் சட்டசபை தேர்தல்; பிரதமர் மோடி புதுச்சேரி பயணம்!




புதுவை, பிப். 03–

பல்வேறு நலத்திட்டப்பணிகளை துவக்கி வைக்க பிரதமர் மோடி வருகிற 11 தேதி புதுவைக்கு வருகிறார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு நேற்று வெளியாகி உள்ளது. அதையொட்டி முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

புதுச்சேரி மாநிலத்தில் என்.ஆர்.காங்கிரஸ்–பா.ஜனதா கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. முதல்–அமைச்சராக ரங்கசாமி உள்ளார். விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தேசிய ஜனநாயககூட்டணி மீண்டும் ஆட்சியை பிடிக்க தற்போதே காய் நகர்த்தி வருகிறது. இதற்காக மத்திய மந்திரிகள் அடிக்கடி புதுவைக்கு வந்து கட்சி நிர்வாக்களை சந்தித்து ஆலோசனை நடத்தி வருகின் றனர்.

மேலும் முதல்–அமைச்சர் ரங்கசாமியையும் சந்தித்து பேசுகின்றனர். புதுவை தேர்தலை முன்வைத்து கடந்த பொங்கல் பண்டிகை அனைத்து ரேஷன்கார்டுகளுக்கும், ரூ750 மதிப்புள்ள பொங்கல் பரிசு தொகுப்புகளுடன் தலா ரூ.3 ஆயிரம் வழங்கப்பட்டது. இதே போல் குடும்ப தலைவிகளுக்கான உதவித்தொகை ரூ.1,000–ல் இருந்து ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டது.

மேலும் முதியோர், உதவித்தொகை ரூ.500 உயர்த்தப்பட்டுள்ளது. அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. இதற்கிடையே தேர்தல் அறிவிப்புக்கு முன்பாக பிரதமர் மோடி புதுவைக்கு வந்து பல்வேறு நலத்திட்டங்களை 5 தொடங்கிவைக்கவேண்டும் என்று முதல் அமைச்சர் ரங்கசாமி, பா.ஜனதா மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம் ஆகியோர் கோரிக்கை விடுத்து வந்தனர். பிரதமர் மோடியும் புதுவைக்கு வருவதாக உறுதி அளித்திருந்தார்.

இந்நிலையில் அவர் வருகிற 11–ந் தேதி (புதன்கிழமை) புதுவைக்கு வருகை தர உள்ளார். அதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு நேற்று வெளியாகி உள்ளது. புதுவை வரும் பிரதமர் மோடி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அரசின் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளார். சபாநாயகர் செல்வம், பா.ஜனதா மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம், அமைச்சர் நமச்சிவாயம் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் நேற்று பிரதமர் மோடி கலந்து கொள்ளும் விழாவை லாஸ்பேட்டை மைதானத்தில் நடத்துவது என முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

லாஸ்பேட்டை தாகூர், கலைக் கல்லூரி மைதானம், விமான நிலைய ஹெலிபேட் மைதானத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள், பொதுமக்கள் வந்து செல்ல மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினர். ஆலோசனை தொடர்ந்து தலைமை செயலகத்தில் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் அமைச்சர் நமச்சிவாயம், செயலாளர் சரத் சவுகான் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் புதுவையில் பிரதமர் மோடி கலந்து கொள்ளும் விழா ஏற்பாடுகள், புதிதாக தொடங்க உள்ள திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். பிரதமர் வருகை உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து புதுவை முழுவதும் பாது காப்பு பலப்படுத்தப்பட உள்ளது.

## பாஜக தேர்தல் சுற்றுப் பயண பொறுப்பாளர் பணி - அண்ணாமலை திடீர் விலகல்!




சென்னை, பிப். 03–

சிங்காநல்லூர், விருகம்பாக்கம் உள்ளிட்ட 6 தொகுதிகளின் தேர்தல் சுற்றுப்பயண பொறுப்பாளர் பணியிலிருந்து விலகுவதாக தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை திடீரென அறிவித்துள்ளார். தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவரை உடனிருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழக சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாள ர்களை நியமித்து அறிவி த்தார். அதன்படி, ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் 2 முதல் 7 தொகுதிகள் வரை ஒதுக்கப்பட்டிருந்தன.

அதில், அண்ணாமலைக்கு கோவை சிங்காநல்லூர், மதுரை தெற்கு, சென்னை விருகம்பாக்கம், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், குமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஆகிய 6 தொகுதிகளுக்கு சுற்றுப்பயண பொறுப்பாளர் பணி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பொறுப்பிலிருந்து விலகு வதாக அண்ணாமலை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோவையில் இன்று (பிப்.3) காலை செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை கூறியதாவது: வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடுவேனா என்று தெரியவில்லை. அதற்கு காலம் தான் பதில் சொல்லும். கட்சி மேலிடம் முடிவு செய்யும். மேலும், எனது தந்தையின் உடல்நிலை சரியில்லாததால் சிங்காநல்லூர், காரைக்குடி உள்ளிட்ட 6 தொகுதிகளின் பாஜக தேர்தல் சுற்றுப்பயண பொறுப்பாளர் பணியிலிருந்து நான் விலகுகிறேன். இது குறித்து கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரனிடமும் தெரிவித்திருக்கிறேன்.

அண்மையில் தாக்கலான மத்திய பட்ஜெட் யாரும் குறை சொல்ல முடியாதளவுக்கு உள்ளது. குறு சிறு நடுத்தர நிறுவனங்களை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்து ள்ளது. ஒவ்வொரு ஆண்டுமே மத்திய பட்ஜெட் பெரிதாகிக் கொண்டே இருக்கிறது.

தமிழகத்தில் நடந்த அண்ணாவின் ஆட்சிக்கும், தற்போதைய திமுக ஆட்சிக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதா?. அண்ணாவின் குடும்பம் இன்று எப்படி இருக்கிறது என்று யாருக்காவது தெரியுமா?. அவர்கள் யாரும் அரசியல் பக்கம் வருவதே இல்லை. இப்போதைய சூழலில், அண்ணா என்ற பசு மாட்டின் மீது நிற்கும் காகம் தான் திமுக ஆட்சி. திமுக மீதான வெறுப்பு திராவிட சித்தாந்தத்துக்கு எதிரானதாக மாறி வருகிறது மேலும், திமுக – காங்கிரஸ் கூட்டணி உடைந்த கண்ணாடி. ஸ்டாலின் என்ன சொன்னாலும் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி 'கெட் – இன்' தான்.

அதுபோல், தமிழகத்தில் அதிமுக தலைமையில் தான் தேசிய ஜனநாயக கூட்டணி களம் காண்கிறது. எடப்பாடி பழனிசாமி தான் எங்களின் முதல்வர் வேட்பாளர். தொ ண்டர்களிடம் கைத்தட்டல், விசில் வாங்க வேண்டும் என்கிற அடிப்படையில் தான் விஜய் பேசுகிறார்.

இதுவரை கட்சிகள் செய்யாத என்ன திட்டத்தை கொண்டு வரப் போகிறோம் என்று மக்களை சிந்திக்க வைக்கும் வகையில் விஜய் எதுவும் பேசவில்லை. அவரின் பேச்சைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. விஜய் வெளியே வந்து வீதி வீதியாக பிரச்சாரம் செய்து மக்கள் ஏற்று கொண்டால் பார்க்கலாம். இவ்வாறு அண்ணாமலை பேசினார்.

### இந்தியா – அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்

# ஒரே போன் காலில் மனம் மாறிய டிரம்ப்..!

### இந்திய பொருட்களுக்கு இனி 18% மட்டுமே வரி..!



அமெரிக்கா, பிப். 03–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கு ஒரு நற்செய்தியை தந்திருக்கிறார். இந்திய பொருட்கள் மீதான அமெரிக்க வரி விதிப்பை 50 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக குறைத்து முக்கியமான அறிவிப்பினை வெளியிட்டு இருக்கிறார்.

எனவே இனி இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான மொத்த வரி விதிப்பு 50 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இடையேயான நள்ளிரவு போன் கால் மாத கணக்கில் இழுத்து வந்த வர்த்தக பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. இந்த ஒப்பந்தம் இந்தியா–அமெரிக்க பொருளாதார உறவுகளை புதிய உயரத்துக்கு கொண்டு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் இந்தியா அமெரிக்க பொருட்களுக்கு விதிக்கும் வரி மற்றும் வரி அல்லாத தடைகளை படிப்படியாக குறைத்து பூஜ்ஜியத்துக்கு கொண்டு செல்வது தான். இதனால் இந்தியாவில் அமெரிக்க பொருட்களின் விலை கணிசமாக குறையும்.

**விலை குறையும் பொருட்களின் லிஸ்ட்:**

இந்த ஒப்பந்தம் மூலம் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு வரும் பருப்பு வகைகள், பால் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்ற விவசாய பொருட்கள் மலிவாக கிடைக்கும். இதேபோல் லேப்டாப், கேஜெட்கள், எலக்ட்ரானிக் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், பேக்கேஜ்டு பொருட்கள், வீட்டு உபயோக பொருட்கள் ஆகியவற்றின் விலை குறையும் வாய்ப்பு உள்ளது. இது உணவு பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு பெரும் நிவாரணமாக அமை யும்.

அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா 0 சதவீத வரி பலன் கொடுத்தாலும். டிரம்ப் இந்திய பொருட்களுக்கு 18 சதவீதம் வரியை தொடர்ந்து விதித்துள்ளார். இது 50 சதவீத வரியில் இருந்து குறைக்கப்பட்டாலும், சமமான வரி விதிப்பு கிடையாது என்பது தான் உண்மை. அமெரிக்கா இந்தியா உடன் மட்டும் அல்லாமல் ஐரோப்பா, பிரிட்டன், ஜப்பான், வியட்நாம் உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் இதேபோன்ற ஒப்பந்தத்தை தான் செய்துள்ளது.

ஆயினும் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கும் இந்த ஒப்பந்தம் பெரும் பயனளிக்கும். அமெரிக்கா இந்திய பொருட்களுக்கு விதிக்கும் 18 சதவீதமாக குறைப்பது மூலம் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு செல்லும் டெக்ஸ்டைல் மற்றும் ஆடை, ரத்தினம் மற்றும் நகை, எஃகு, கெமிக்கல், பொறியியல் பொருட்கள் போன்ற துறைகள் குறைந்த விலையில் பொருட்களை ஏற்றுமதி செய்யும். இந்திய ஏற்றுமதியாளர்களின் அமெரிக்க சந்தையில் வர்த்தகம் செய்வது பழைய நிலைக்கு திரும்பும் (வரி விதிப்புக்கு முன் இருந்த நிலை).

**முக்கிய துறைகளுக்கு செக்**

ஆனால் சில துறைகளில் வரி தொடரும். அமெரிக்காவின் செக்ஷன் 232 விதிகளின் கீழ் எஃகு, அலுமினியம், தாமிரம் ஆகியவற்றுக்கு சுமார் 50 சதவீத வரி தொடரும். சில ஆட்டோமொபைல் உதிரிபாகங்களுக்கு 25 சதவீத வரி நீடிக்கும். இதேபோல் இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா அமெரிக்காவிலிருந்து 500 பில்லியன் டாலருக்கும் மேல் எனர்ஜி, தொழில்நுட்பம், விவசாயம், நிலக்கரி உள்ளிட்ட பொருட்களை வாங்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் இந்தியாவில் உள்ள உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவும். அமெரிக்க பொருட்கள் மலிவாவதால் நுகர்வோர் பயனடைவர். இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு இழந்த சந்தையை மீண்டும் பெற வாய்ப்பு உருவாகும்.

இரு தலைவர்களும் இதை "வரலாற்று சிறப்பு மிக்க வர்த்தக ஒப்பந்தம்" என்று குறிப்பிட்டு உள்ளனர்.

தொடர்ந்து அமெரிக்கர் அதிபர் டிரம்புக்கு நன்றி தெரிவித்து பிரதமர் நரேந்திர மோடியும் எக்ஸ் பக்கத்தில் பதிவு செய்திருக்கிறார். 140 கோடி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமர் நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டு இருக்கிறார். இந்தியா அமெரிக்கா இடையே ஏற்பட்டிருக்க கூடிய இந்த ஒப்பந்தத்திற்கு தொழிலதிபர்கள், சந்தை நிபுணர்கள், பொருளாதார வல்லுநர்கள் பெரிய வரவேற்பை தெரிவித்துள்ளனர். இது வரலாற்று சிறப்பு வாய்ந்த வெற்றி என குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் இருதரப்பு பொருளாதார உறவுகள் ஊக்கம் பெறும் என்றும் உலக வர்த்தகத்தில் இந்தியாவின் நிலை வலுப்படும் என்றும் தொழில்துறையினர் கூறுகின்றனர். பங்குச்சந்தையை பொறுத்தவரை இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் பங்குச்சந்தை மீண்டு வருவதற்கு மிகச்சிறந்த ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி தந்திருப்பதாக முதலீட்டு துறை சார்ந்தவர்கள் கூறுகின்றனர்.








தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேரறிஞர் அண்ணா 57–வது நினைவு நாளையொட்டி சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் வாலாஜி சாலையில் உள்ள அண்ணா சிலை அருகிலிருந்து காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் வரை அமைதி பேரணி நடந்தது. இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 03.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 20-ம் தேதி

# பொற்காலம் பிறந்தது!!



அமெரிக்க அதிபர் டொனால்ட் கடந்த ஆகஸ்ட் மாதம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25% வரியை விதித்தார். பின்னர் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை காரணமாக கூறி கூடுதலாக 25 % என மொத்த 50% வரியை விதித்தார்.

இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி என்பது ஏற்றுமதி துறை சார்ந்த தொழில்களை வெகுவாக பாதித்தது. இதில் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு. இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடை துறையின் ஏற்றுமதிக்கான அடித்தளமாக விளங்குகிறது தமிழ்நாடு. நாட்டின் ஜவுளி ஏற்றுமதியில் 28 சதவீத பங்களிப்பை தமிழ்நாடு கொண்டிருக்கிறது. அதுமட்டுமின்றி தமிழ்நாட்டில் 75 லட்சம் தொழிலாளர்களுக்கு இந்த ஜவுளி துறை தான் வேலை வாய்ப்பு வழங்குகிறது. அதேபோல தோல் பொருள் மற்றும் காலணி ஏற்றுமதிலும் ஒட்டுமொத்த இந்தியாவிலேயே தமிழ்நாடு 40 சதவீத பங்களிப்பு தருகிறது. இதில் சுமார் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அமெரிக்காவின் இந்த 50 சதவீத வரிவிதிப்பு ஒட்டுமொத்தமாக 80 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்களை பாதிக்க செய்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியிருந்த கடிதத்தில் அமெரிக்காவின் 50% வரி விதிப்பால் பின்னலாடை தலைநகரமான திருப்பூரில் உறுதிப்படுத்தப்பட்ட ஆர்டர்களில் ஏற்றுமதியாளர்களுக்கு 15,000 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் நிறுவனங்களில் 30% வரை கட்டாய உற்பத்தி குறைப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும் புதிய ஆர்டர்கள் கிடைக்காமல் திருப்பூர், கோயம்புத்தூர் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு தினமும் 60 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு இருப்பதாக முதலமைச்சர் ஸ்டாலின் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். இது மட்டுமில்லாமல் வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள காலணி உற்பத்தி நிறுவனங்களும் இந்த வரி விதிப்பால் கடமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன என சுட்டிக்காட்டி இருந்தார்.

திருப்பூர் ஜவுளி உற்பத்தி நிறுவனங்களின் முதன்மையான சந்தையே அமெரிக்கா தான். பல்வேறு நிறுவனங்களும் 100% ஆர்டர்களை அமெரிக்க சந்தைக்கு தான் அனுப்பி வைக்கின்றன. எனவே 50% வரி விதிப்பால் லாபத்தை குறைத்துக் கொண்டு நஷ்டத்திற்காக பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைக்கும் ஆளாகி இருப்பதாக வேதனை தெரிவித்தனர். இது நீடித்தால் லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் பறிபோகும் என்றும் கூறி இருந்தனர்.

இந்த நிலையில் தான் அமெரிக்கா, இந்திய பொருட்கள் மீதான வரி விதிப்பை 18 சதவீதமாக குறைத்து லட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் மீண்டும் விளக்கேற்றி வைத்திருக்கிறது. இதன் மூலம் பெரிய அளவில் திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர் ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தியாளர்களும் ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மாவட்ட காலணி உற்பத்தியாளர்களும் பலன் பெற இருக்கின்றனர். கடந்த ஆண்டு இழந்ததை எல்லாம் இந்த ஆண்டு அவர்களுக்கு திரும்ப பெறுவதற்கான ஒரு வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கிறது. அந்த வகையில் அமெரிக்கா இந்தியா மீதான வரியை குறைத்திருப்பது சுமார் 80 லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு பலன் அளித்துள்ளது. கூடிய விரைவில் வர்த்தக ஒப்பந்தமும் ஏற்பட்டு விட்டால் இன்னும் இவர்களின் வாழ்க்கையில் ஒளி வீசும்.

# தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு அடித்த ஜாக்பாட்..!! அமலுக்கு வரும் புதிய சம்பள உயர்வு..!!

சென்னை, பிப். 03–

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில், 2026–ஆம் ஆண்டு பிறப்பிலேயே ஒரு இனிப்பான செய்தி வெளியாகியுள்ளது. அகில இந்திய நுகர்வோர் விலை குறியீட்டின் (AICPI) சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, அரசுப் பணியாளர்களுக்கான அகவிலைப்படி (DA) 5 சதவீதம் வரை உயரக்கூடும் எனத் தெரிய வந்துள்ளது. தற்போது நிலவி வரும் விலைவாசி உயர்வு மற்றும் பணவீக்கத்தை கருத்தில் கொண்டு, அரசு ஊழியர்களுக்கு வழங்க ப்பட்டு வரும் 58 சதவீத அகவிலைப்படியை 63 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு மத்திய அரசால் வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட வாய்ப்புள்ளது. வழக்கம்போல, மத்திய அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழக அரசும் தனது ஊழியர்களுக்கான



அகவிலைப்படி உயர்வை உடனடியாக அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, தமிழகத்தின் இடைக்கால பட்ஜெட்டில் இதற்கான முறையான அறிவிப்பை முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிடுவார் என்று அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றனர். இந்த 5 சதவீத உயர்வு என்பது ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக, ஒரு ஊழியரின் அடிப்படைச் சம்பளம் 40,000 ரூபாய் எனில், 58 சதவீத அகவிலைப்படியின் கீழ் அவர் 23,200 ரூபாயைப் பெற்று வருகிறார். இது 63 சதவீதமாக உயரும்போது, அவருக்குக் கிடைக்கும் அகவிலைப்படி 25,200 ரூபாயாக அதிகரிக்கும். இதன் மூலம் மாதம் 2,000 ரூபாய் வரை கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. அடிப்படைச் சம்பளம் அதிகமாக உள்ள உயர்மட்ட அதிகாரிகளுக்கு இந்த உயர்வு இன்னும் கணிசமாக இருக்கும்.

**வீட்டு வாடகைப்படி மற்றும் நிலுவைத் தொகை :**

7–வது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, அகவிலைப்படி 50 சதவீதத்தை கடந்துவிட்டாலே வீட்டு வாடகைப்படி (HRA) மற்றும் இதர படிகளும் தானாகவே உயர வேண்டும் என்ற விதி உள்ளது. இதனால் ஊழியர்களின் ஒட்டுமொத்தச் சம்பளம் (Gross Salary) கணிசமாக உயரக்கூடும். இந்த உயர்வு ஏப்ரல் மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படலாம் என்றும், ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாத காலத்திற்கான நிலுவைத் தொகை (Arrears) ரொக்கமாகவோ அல்லது சேமிப்பு நிதியிலோ சேர்க்கப்பட வாய்ப்புள்ளது.

**8–வது ஊதியக் குழுவின் நிலை என்ன..?**

8–வது ஊதியக் குழுவை அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கினாலும், அது நடைமுறைக்கு வர இன்னும் சில காலம் எடுக்கும் எனத் தெரிகிறது. அதுவரை பணவீக்கத்தின் தாக்கத்தில் இருந்து ஊழியர்களைப் பாதுகாக்க இந்த அகவிலைப்படி உயர்வு ஒரு வலுவான அரணாக அமையும்.

# ஊழியர்கள் கவனத்திற்கு..! புதிய PF விதிகள்..!

டெல்லி, பிப். 03–

மத்திய அரசு ஊழியர்களின் நலனுக்காக ,நாட்டில் உள்ள கோடிக்கணக்கான தனியார் துறை ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த மத்திய அரசு ஒரு முக்கிய முடிவை எடுக்கப் போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக நிலுவையில் உள்ள EPFO சம்பள வரம்பை உயர்த்துவதற்கான இந்தத் திட்டம், 2026 பட்ஜெட்டில் நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. தற்போதைய சம்பள வரம்பான ரூ. 15,000–ஐ ரூ. 25,000 ஆக உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இது ஊழியர்களின் மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் பிஎஃப் நிதியை கணிசமாக அதிகரிக்கும். மேலும், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் EPFO–வின் கீழ் வருவார்கள். இதன் மூலம், அவர்களுக்குக் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.

**EPF ஓய்வூதியத்தை கணக்கிடுவது எப்படி?**

ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் (EPS) கீழ் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கான தற்போதைய சம்பள வரம்பு ரூ. 15,000 மட்டுமே. இது ரூ. 25,000




ஆக உயர்த்தப்பட்டால், முதுமையில் கிடைக்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையும் கணிசமாக அதிகரிக்கும். தற்போது, ரூ. 15,000–க்கு மேல் அடிப்படைச் சம்பளம் வாங்குபவர்கள் EPFO–வின் கீழ் வரவில்லை. இந்த வரம்பை ரூ. 25,000 ஆக உயர்த்துவதன் மூலம், கூடுதலாக சுமார் 1 கோடி ஊழியர்கள் பிஎஃப் மற்றும் ஓய்வூதியப் பலன்களின் கீழ் வருவார்கள்.

மேலும், சம்பள உச்சவரம்பு உயர்த்தப்பட்டால், பிஎஃப் பங்களிப்பு அதிகரிக்கும். இது ஊழியர்களின் ‘கையில் கிடைக்கும் சம்பளத்தை’ சற்றே குறைக்க வாய்ப்புள்ளது. இருப்பினும், நீண்ட கால சேமிப்பு மற்றும் ஓய்வூதியப் பலன்களைக் கருத்தில் கொண்டு இது ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் என்று நிதி வல்லுநர்கள் கூறுகின்றனர். இந்தத் திட்டம் குறித்த இறுதி முடிவு அடுத்த மாதம் நடைபெறவுள்ள மத்திய அறங்காவலர் குழு (CBT) கூட்டத்தில் எடுக்கப்படும். பட்ஜெட்டில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியானால், இது நடுத்தர வர்க்கம் மற்றும் குறைந்த ஊதியம் பெறுபவர்களின் நிதி எதிர்காலத்திற்கு ஒரு பெரிய ஊக்கத்தை அளிக்கும். முன்னதாக, இந்த வரம்பு ரூ. 6,500–லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது இந்த வரம்பு மேலும் ரூ. 25,000 ஆக உயர்த்தப்படும் என்று கூறப்படுகிறது.

**பிஎஃப் கணக்கீடு எப்படி மாறும்?**

பொதுவாக, உங்கள் அடிப்படைச் சம்பளத்தில் 12% பிஎஃப் கணக்கிற்குச் செலுத்தப்படுகிறது. நிறுவனமும் அதே தொகையைச் செலுத்துகிறது. இருப்பினும், உங்கள் சம்பளம் தற்போது ரூ. 30,000 ஆக இருந்தாலும், பிஎஃப் பிடித்தம் ரூ. 15,000 என்ற அடிப்படைச் சம்பள வரம்பில் மட்டுமே செய்யப்படும் (அதாவது ரூ. 1800). எதிர்காலத்தில் சம்பள வரம்பு ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டால், ரூ. 3,000 (25,000–ல் 12%) நேரடியாக பிஎஃப் கணக்கிற்குச் செல்லும்.

**இபிஎஃப் ஓய்வூதியத்தை கணக்கிடுவது எப்படி..**


சம்பள வரம்பு அதிகரித்தால், ஒவ்வொரு மாதமும் உங்கள் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் தொகை அதிகரிக்கும். இது உங்கள் கையில் கிடைக்கும் பணத்தைக் குறைக்கும். இது உங்கள் மாதாந்திரச் செலவுகளைப் பாதிக்கலாம். உங்கள் பிஎஃப் கணக்கில் இருப்பு அதிகரிப்பது, ஓய்வு பெறும் நேரத்தில் உங்களுக்கு ஒரு பெரிய தொகை கிடைக்க வழிவகு க்கும். மேலும், ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டுப் பலன்களும் மேம்படும். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளைத் தொடர்ந்து இந்த வரம்பை அதிகரிக்க அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

# ஃபாஸ்டேக் விதிகளில் மாற்றம்..! கவனம்..!

டெல்லி, பிப். 03–

இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் (NHAI) படி, பிப்ரவரி 1, 2026 பிறகு வழங்கப்படும் புதிய ஃபாஸ்டேக்குகளுக்கு, பயனர்கள் KYC/KYV செயல்முறையை மேற்கொள்ளத் தேவையில்லை. குறிப்பாக, கார்கள், ஜீப்புகள் மற்றும் வேன்கள் போன்ற தனிப்பட்ட வாகனங்களுக்கு “உங்கள் வாகனத்தை அறிந்துகொள்ளுங்கள் (KYV)” செயல்முறை நிறுத்தப்பட்டுள்ளது.


ஆனால், சுங்கக் கட்டண பாக்கிகள் விஷயத்தில் அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஒரு வாகனம் சுங்கச்சாவடியை அடையும்போது, சுங்கக் கட்டணம் ஃபாஸ்டேக்கிலிருந்து தானாகவே கழிக்கப்படுகிறது. ஆனால் சில சமயங்களில், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சுங்கக் கட்டணம் கழிக்கப்படாமல், நிலுவையில் இருப்பதாகக் காட்டப்படுகிறது. அத்தகைய நேரத்தில், உங்களுக்கு




சுங்கக் கட்டண பாக்கி இருப்பது போன்ற நிலை ஏற்படுகிறது. இந்த விவரங்கள் அரசாங்கப் பதிவேடுகளிலும் பதிவு செய்யப்படுகின்றன. பாக்கி இருக்கும் பட்சத்தில், வாகன உரிமையாளருக்கு தடையில்லாச் சான்றிதழ் (NOC) வழங்கப்படாது. அதாவது, நீங்கள் வாகனத்தை ஒருவருக்கு விற்கும்போது, உங்களுக்குத் தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்படாது. அப்போது வாகனத்தை விற்பதில் சிரமங்கள் ஏற்படலாம். எனவே, உங்கள் வாகனத்தில் ஏதேனும் பாக்கிகள் இருந்தால், அவற்றைச் செலுத்தித் தீர்ப்பது முக்கியம்.


தடையில்லாச் சான்றிதழ் கிடைக்காதது வாகன உரிமையாளரை நேரடியாகப் பாதிக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், வாகனத்தை விற்பது சாத்தியமற்றது, அல்லது வாகனத்தை மற்றொரு மாநிலத்தில் பதிவு செய்ய முடியாது. நிலுவையில் உள்ள சுங்கக் கட்டணங்கள் காரணமாக வாகனத்தின் தகுதிச் சான்றிதழும் நிராகரிக்கப்படலாம். மேலும், லாரிகளுக்கு தேசிய அனுமதி கிடைக்காது. அரசாங்கம் NOC தொடர்பான படிவம் 28–ஐயும் திருத்தியுள்ளது. வாகன உரிமையாளர்கள் இனி தங்கள் வாகனத்தில் எந்தச் சுங்கக் கட்டணமும் பாக்கி இல்லை என்று இந்தப் படிவத்தில் அறிவிக்க வேண்டும். தவறான தகவல்களை வழங்கினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம். சுங்கக் கட்டணத்துடன், போக்குவரத்து விதிமீறல்களுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அமைச்சகத்தின் சமீபத்திய அறிவிப்பின்படி, ஒரு வாகன ஓட்டி ஒரு வருடத்தில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட முறை போக்குவரத்து விதிகளை மீறினால், அவரது ஓட்டுநர் உரிமம் இடைநீக்கம் செய்யப்படலாம். ஓட்டுநர் உரிமங்களை இடைநீக்கம் செய்யும் உரிமை RTO மற்றும் DTO–க்களுக்கு உண்டு.

# முதல் அமைச்சர் படத்துடன் பட்டம் பெற்ற மாணவர்- கவர்னர் பங்கேற்ற விழாவில் பரபரப்பு!




சிதம்பரம், பிப். 03–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 87வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சாஸ்திரி அரங்கத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு கவர்னர் ஆர்.என். ரவி பங்கேற்று பட்டமளிப்பு விழாவை நடத்தி 1014 மாணவ, மாணவிகளுக்கு நேரடியாக பட்டங்களையும், பதக்கங்களையும் வழங்கினார். சமீப காலங்களாக கவர்னருக்கும், தமிழ்நாடு அரசுக்கும் தொடர்ந்து பல்வேறு விவகாரங்களில் மோதல் போக்கு நீடித்து வந்தது. அதன் காரணமாக பட்டமளிப்பு விழாக்களில் உயர்கல்வித்துறை அமைச்சர் பங்கேற்பதில்லை. அந்த வகையில் இன்று அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலும் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் பங்கேற்காமல் புறக்கணித்தார். மேலும் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் படத்துடன் கவர்னருடன் மாணவர் ஒருவர் பட்டம் பெற்றது பரபரப்பை ஏற்படுத்தியது. இதன் பிறகு முழு சோதனைக்குப் பிறகே மற்ற மாணவர்கள் மேடையேற அனுமதிக்கப்பட்டனர்.



# கால சர்ப்ப தோஷத்தை போக்க ‘மகா சிவராத்திரி’ உதவுமா?




ஜோதிட குறிப்புகளில் ராகு மற்றும் கேது இரண்டும் நிழல் கிரகமாக கருதப்படுகிறது. இவ்விரு கிரகங்களின் மோசமான நிலைபாடு ஆனது, தனி ஒரு நபரின் வாழ்கையில் எதிர்மறையான பலன்களை கொண்டு வரும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்த வரிசையில், திருமண தடை, குழந்தை பாக்கியத்தில் பிரச்சனை, குடும்ப வாழ்க்கையில் சண்டை – சச்சரவுகள் கொண்டு வரும் என கூறப்படுகிறது. ராகு – கேது கிரகங்களின் மோசமான நிலையால் உண்டாகும் இந்த தோஷத்தை போக்க சிவன் வழிபாடு உதவும் எனவும்; அதிலும் குறிப்பாக மகா சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபடுவது சிறப்பான பலன்களை அளிக்கும் எனவும் நம்பப்படுகிறது. இந்நிலையில், எதிர்வரும் மகா சிவராத்திரி தினத்தில் இந்த தோஷத்தை போக்க நாம் செய்ய வேண்டிய என்ன? பரிகாரங்கள் என்ன? என்பது குறித்து காணலாம்!

**கால சர்ப்ப தோஷத்தின் வகைகள்!**

நிபுணர்கள் கணிப்புப்படி இந்த கால சர்ப்ப தோஷம் மொத்தம் 12 வகையில் குறிப்பிடப்படுகிறது. அனந்த, சங்கசூட, கடக சர்ப்ப, குளிகை சர்ப்ப, வாசுகி சர்ப்ப, சங்கல்ப சர்ப்ப, பத்ம சர்ப்ப, மகா பத்ம, தக்ஷக சர்ப்ப, கார் கோடக சர்ப்ப, விஷ் தார சர்ப்ப மற்றும் சேஷ நாக சர்ப்ப தோஷம் என மொத்தம் 12 வகைகளாக குறிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட தோஷங்கள் அனைத்தும் தனித்துவமான பண்புகளை கொண்டிருப்பதாகவும், தனித்துவமான பரிகாரங்களை கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதில் ஒரு சில தோஷங்கள் உறவுக்குள் பிரச்சனைகளை கொண்டு வருகிறது, ஒரு சில தோஷம் உடல் / மன ஆரோக்கியத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

தங்கள் தோஷத்திற்கு ஏற்ப சரியான பரிகாரத்தை தேர்வு செய்து, மகா சிவராத்திரி தினத்தில் செய்து வர, இந்த தோஷத்தின் தாக்கத்தை குறைக்க முடியும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்!

**சர்ப்ப தோஷமும், மகா சிவராத்திரியும்... தொடர்பு என்ன?**

மகா சிவராத்திரி எனப்படுவது சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தினம் ஆகும். சிவனும் – பார்வதியும் இணையும் ஒரு சிறப்பு தினம் ஆகும். குறித்த இந்த தினத்தில் சிவனை வழிபடுவது, நம் வாழ்க்கையில் உள்ள அனைத்து விதமான பிரச்சனைகளில் இருந்து விடுபட உதவியாக இருக்கும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் ராகு மற்றும் கேதுவின் அதிபதியாக சிவன் பார்க்கப்படுகிறார். அந்த வரிசையில் இந்த சர்ப்ப தோஷத்தில் இருந்தும் விடுபட முடியும் என நிபுணர்கள் கருதுகின்றனர். இந்த கால சர்ப்ப தோஷத்தின் தாக்கத்தை குறைக்க மகா சிவராத்திரி தினத்தில், சிவலிங்கத்திற்கு ருத்ராபிஷேகம் செய்து, மந்திரங்களை உச்சரிப்பது மற்றும் சிறப்பு பூஜைகளில் பங்கேற்பது நல்லது என நிபுணர்க் குறிப்பிடுகின்றனர்.

**சிவனை வழிபடுவது எப்படி?**

கால சர்ப்ப தோஷத்தின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க சிவனை முறையாக வழிபடுவது அவசியம்.

மகா சிவராத்திரி தினத்தில் சிவலிங்கத்திற்கு பால், தயிர், நெய், தேன் மற்றும் கங்கை நீர் கொண்டு அபிஷேகம் செய்வது நல்லது. தொடர்ந்து சிவலிங்கத்திற்கு வெள்ளி பாம்புகளை காணிக்கையாக அர்ப்பணிக்கலாம்.

சிவனை வழிபடும் போது ‘ஓம் நக்குலாய வித்மஹே விஷ்டாந்தாய் தீமஹி தன்னோ சர்ப்ப பிரச்சோதயாத்’ எனும் மந்திரத்தை 108 முறை உச்சரிப்பது நல்லது. மேலும், நாக பஞ்சமி விரதத்தை கடைப்பிடிப்பதும் – அருகில் உள்ள பாம்பு புற்றில் பாலை காணிக்கையாக செலுத்துவதும் நல்லது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். பால் மட்டும் அல்ல, கருப்பு எள்ளையும் தானமாக அளிக்கலாம்.

**வழிபடும் முன்னர்!**

கால சர்ப்ப தோஷமானது தனி நபரின் வயது மற்றும் கிரக நிலை அடிப்படையில் மாறுபடும் நிலையில், உங்கள் தோஷத்தின் வகை என்ன? அதற்கான தனித்துவமான பலன் என்ன? என்பதை உங்கள் ஜோதிட நிபுணரிடம் கேட்டு அறியுங்கள். மேலும், அதற்கான பரிகாரத்தை கண்டறிந்து, மகா சிவராத்திரி தினத்தில் கடைபிடியுங்கள். காரணம், இங்கு குறிப்பிட்டுள்ள பரிகாரங்கள் அனைத்தும் பொதுவான பரிகாரங்கள் ஆகும்.

சர்ப்ப தோஷத்தின் தாக்கத்தை குறைக்கும் இந்த பொதுவான பரிகாரங்கள், உங்கள் தனிப்பட்ட தோஷத்தின் தாக்கத்தை குறைப்பதில் தாமதக்கிலாம். எனவே, உங்கள் தனிப்பட்ட தோஷத்திற்கான பரிகாரம் என்ன? என்பதை கேட்டு அறிந்து அதற்கு ஏற்ற வகையில் பரிகாரம் செய்ய பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம். திருமண தடை நீங்கும், மன நிறைவான வாழ்க்கை கிடைக்கும், உடல் ஆரோக்கியம் – மன ஆரோக்கியம் இரண்டும் மேம்படும்!

# மாற்றுத்திறனாளிகளுக்கு டயப்பர்கள் வழங்கல்!



மதுரை, பிப். 03–

மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு டயபர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் கூறுகையில்: முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புற்றுநோயால் படுக்கையில் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு டயப்பர் தேவைப்படுவதாக கோரிக்கை வந்ததைத் தொடர்ந்து அவர்களின் குடும்பத்தாரிடம் டயப்பர்கள் வழங்கப்பட்டது என்றார். நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் கிரேசியஸ் மற்றும் ஸ்ரீகாந்த் கலந்து கொண்டனர்.

நலம் நலமறிய..!
மருத்துவ குறிப்புகள்



## இரவில் தாமதமாக தூங்குபவரா நீங்கள்..?



இன்றைய நவீன உலகில் வேலைப்பளு மற்றும் சமூக வலைதளங்களின் மோகத்தால் பலரும் நள்ளிரவு வரை விழித்திருந்துவிட்டு, அதிகாலையில் தாமதமாக எழுவதை ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளனர். ஆனால், இத்தகைய பழக்கம் உங்கள் உயிருக்கே உலை வைக்கும் ஒரு காரணியாக மாறக்கூடும் என்று மருத்துவ ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) கணக்கின்படி, ஆண்டுதோறும் சுமார் 2 கோடி மக்கள் இதய நோய்களால் உயிரிழக்கின்றனர். இதில் பெரும்பாலான மரணங்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் தான் முக்கிய காரணமாக அமைகிறது. இந்த வரிசையில், தற்போது மேற்கொள்ளப்பட்ட ஒரு புதிய ஆய்வு, நாம் எப்போது தூங்குகிறோம் என்பதும் இதய ஆரோக்கியத்தை நேரடியாக பாதிக்கிறது என்பதைக் கண்டுபிடித்துள்ளது.

அமெரிக்க இதய சங்கத்தின் இதழில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வில், சுமார் 3.2 லட்சம் பேரின் தூக்க முறைகள் கடந்த 14 ஆண்டுகளாக தீவிரமாக கண்காணிக்கப்பட்டன. இதில் அதிகாலையில் எழுபவர்கள் மற்றும் நள்ளிரவு வரை விழித்திருப்பவர்கள் என இரு தரப்பினரையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அதிர்ச்சிகரமான முடிவுகள் கிடைத்தன. அதாவது, இரவு நீண்ட நேரம் விழித்திருக்கும் பழக்கம் கொண்டவர்களுக்கு, மற்றவர்களை விட இதய நோய்கள் ஏற்படுவதற்கான அபாயம் 79 சதவீதம் வரை அதிகமாக உள்ளது தெரியவந்துள்ளது.

இந்த பாதிப்பிற்கு பின்னால் ஒரு முக்கியமான அறிவியல் காரணம் ஒளிந்துள்ளது. நமது உடலானது இயற்கையான பகல் மற்றும் இரவு சுழற்சிக்கு ஏற்ப இயங்கும் ஒரு உயிரியல் கடிகாரத்தை கொண்டுள்ளது. நாம் இரவு நேரத்தில் நீண்ட நேரம் விழித்திருக்கும்போது, இந்த உயிரியல் கடிகாரம் நிலைதடுமாறுகிறது. இது உடலில் சர்க்கரை அளவு அதிகரிப்பு, இரத்த அழுத்த மாறுபாடு மற்றும் வளர்சிதை மாற்றப் பிரச்சனைகளை உருவாக்குகிறது. இதனால்தான், இரவு நேரங்களில் ஷிப்ட் முறையில் வேலை செய்பவர்களுக்கு இதய பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று மருத்துவர்கள் நீண்டகாலமாகவே கூறி வருகின்றனர்.

இருப்பினும், இந்த ஆபத்து என்பது வெறும் தூக்க நேரத்தால் மட்டுமே உருவாவதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர். இரவு நேரங்களில் விழித்திருப்பவர்கள் பெரும்பாலும் முறையற்ற உணவுப் பழக்கம், போதிய உடற்பயிற்சியின்மை, புகைப்பிடித்தல் மற்றும் மன அழுத்தம் போன்ற தவறான வாழ்வியல் முறைகளைக் கொண்டுள்ளனர். இவை அனைத்தும் சேர்ந்து இதயத்தின் செயல்பாட்டை மெல்ல மெல்ல முடக்கிவிடுகின்றன.

இந்த ஆபத்தில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள நீங்கள் செய்ய வேண்டியது மிக எளிமையான சில மாற்றங்களே. முதலாவதாக, தூங்கும் நேரத்தையும் விழிக்கும் நேரத்தையும் தினமும் ஒரே சீராக வைத்திருக்க பழக வேண்டும். காலையில் எழுந்தவுடன் சிறிது நேரம் சூரிய வெளிச்சம் உடலில் படுமாறு நடைப்பயிற்சி மேற்கொள்வது உங்கள் உடலின் உயிரியல் கடிகாரத்தைச் சீரமைக்க உதவும். அத்தோடு இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் மற்றும் சர்க்கரை அளவை அவ்வப்போது பரிசோதித்துச் சீராக வைத்திருக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், உங்கள் இதயத்தின் நலன் உங்கள் கைகளில்தான் உள்ளது; சரியான நேரத்தில் தூங்கிச் சரியான நேரத்தில் எழுவது உங்கள் ஆயுளைக் கூட்டும் ஒரு எளிய மந்திரமாகும்.

## நகைக்கடன் தள்ளுபடி.. பறந்த முக்கிய உத்தரவு..!!



சென்னை, பிப். 03–

தமிழகத்தில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், கூட்டுறவு வங்கிகளின் நகைக் கடன் தள்ளுபடி குறித்த விவகாரம் தற்போது அரசியல் வட்டாரத்திலும், பொதுமக்களிடையேயும் பேசுபொருளாக மாறியுள்ளது. அதன்படி, மாநிலம் முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கிகளில் நிலுவையில் உள்ள நகைக் கடன்களின் பட்டியலைத் துல்லியமாகத் தயார் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மாவட்ட வாரியாக எவ்வளவு கடன் நிலுவையில் உள்ளது, எத்தனைப் பயனாளிகள் இதன் மூலம் பயன்பெறுவார்கள் என்பது குறித்த விரிவான தரவுகளைச் சேகரிக்கும் பணி ரகசியமாக நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. எனவே, நகைக்கடன் தள்ளுபடி குறித்த அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியாகலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

அதே சமயம், திமுக மற்றும் அதிமுக ஆகிய இரண்டுமே இந்த நகைக் கடன் விவகாரத்தைத் தங்களது தேர்தல் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த திட்டமிட்டு வருகின்றன. வரும் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் இல்லத்தரசிகள் மற்றும் விவசாயிகளைக் கவரும் வகையில் நிபந்தனையற்ற நகைக் கடன் தள்ளுபடி குறித்த கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை இடம்பெற செய்ய இரு கட்சிகளுமே மல்லுக்கட்டி வருகின்றன. கடந்த காலத் தேர்தல்களிலும் நகைக் கடன் தள்ளுபடி என்பது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில், இந்த முறையும் அதே பாணியைப் பின்பற்ற அரசியல் கட்சிகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

## பிப். 6 ஆம் தேதி முதல் தவெக விருப்ப மனு!



சென்னை, பிப். 03–

தமிழகத்தில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது.

இதையொட்டி அரசியல் கட்சிகள் கூட்டணி மற்றும் தேர்தலில் போட்டியிட விரும்புவோரிடம் இருந்து விருப்ப மனு பெறும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழ்நாட்டு அரசியலில் முதல் முறையாக களமிறங்க இருக்கும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு வருகிற பிப்ரவரி 6ஆம் தேதி முதல் விருப்ப மனு வினியோகிக்கப்படும் என த.வெ.க. கட்சி அறிவித்துள்ளது.

## மற்றவர்கள் பேசினால் கூட்டணி பேச்சுவார்த்தை, ஆனால் தே.மு.தி.க. பேசினால்... - பிரேமலதா!



சென்னை, பிப். 03–

சென்னை விமான நிலையத்தில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* கூட்டணி குறித்து தே.மு.தி.க. தலைமை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும். அதுதான் இறுதியான அறிவிப்பு.
* கூட்டணி குறித்து ஊடகங்கள் தேவையற்ற செய்திகளை வெளியிட வேண்டாம்.
* வெகு விரைவில் அனைவரையும் அழைத்து நல்ல செய்தியை கூறுவோம்.
* இன்று கூட்டணி குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.
* இன்று மாவட்ட செயலாளர்கள் கூட்டம் என வெளியான செய்தியிலும் உண்மையில்லை.
* தமிழகம், தேசிய அளவில் உள்ள அனைத்து கட்சிகளும் தே.மு.தி.க.விற்கு தோழமை கட்சிகள் தான்.
* மற்றவர்கள் பேசினால் பேச்சுவார்த்தை, தே.மு.தி.க. பேசினால் தனிப்பெயரா?

இவ்வாறு அவர் கூறினார்.

## பணிக்கு வராமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு சம்பளம் கிடையாது! ஆக்டோ ஜியோவுக்கு தலைமைச் செயலர் எச்சரிக்கை!




சென்னை, பிப். 03–

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டம் குறித்து அதிருப்தி தெரிவித்து, அரசு ஊழியர்கள் சங்கங்கள் இணைந்து ஆக்டோ ஜியோ என்ற அமைப்பை உருவாக்கி உள்ளன. இவை, தமிழ்நாடு அரசுக்கு எதிராக வேலை நிறுத்தம் போராட்டம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், பணிக்கு வராவிட்டால் சம்பளமில்லை என தலைமைச் செயலர் நா.முருகானந்தம் அறிவித்துள்ளார். தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 20 ஆண்டுகளுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வந்த நிலையில், சமீபத்தில் தமிழக அரசு 'டேப்ஸ்' எனப்படும் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்தது. இதில் பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்ட நிலையில், ஓய்வுபெறும் சூழலில் பங்களிப்பு அல்லது உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம் என அரசாணையில் கூறப்பட்டது.

இருப்பினும் தங்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டமே வேண்டும் என்று, பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட ஒழிப்பு இயக்கம் உள்ளிட்ட சில அமைப்புகள் இணைந்து ஆக்டோ ஜியோ என்ற கூட்டமைப்பை உருவாக்கியதுடன், இன்று பிப்.3 முதல் கால வரையற்ற போராட்டத்தையும் அறிவித்தது. மேலும் சில அமைப்புகள் பிப்.10 முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்துள்ளன.

இந்த நிலையில், தலைமைச் செயலர் நா. முருகானந்தம் அனைத்து துறை செயலர்கள், துறைத் தலைவர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், "அரசு ஊழியர்களுக்கான நடத்தை விதிகளை மீறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அவர்கள் பணிக்கு வராவிட்டால், வராத நாட்களுக்கு சம்பளம் இல்லை. போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு, மருத்துவ விடுப்பு தவிர்த்து தற்செயல் விடுப்பு அல்லது வேறு விடுப்புகள் அனுமதிக்கப்பட மாட்டாது" என்று கூறப்பட்டுள்ளது.



பழனி உழவர் சந்தையில் அடிப்படை வசதிகள் கோரி விவசாயிகள் காய்களை பதிய மறுத்து தர்னா.

## அருந்ததி பட்டாச்சார்யா, தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, சேல்ஸ்போர்ஸ் தெற்காசியா!



சென்னை, பிப். 03–

"பட்ஜெட் 2026, இந்தியா வெறும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் நாட்டு அல்லாமல், AI பவர்டு இன்னோவேஷன் மூலம் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் நாடாக மாறும் திசையை தெளிவாகக் காட்டுகிறது. கிளவுட் சேவைகளுக்கான 2047 வரை வரிச்சலுகை, தரவு சுயாட்சி மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் புத்திசாலித்தனமான முயற்சியாகும். இது இந்தியாவை உலகளாவிய கிளவுட் மையமாக மாற்றும் திறன் கொண்டது."

"MSME களுக்கு ₹10,000 கோடி SME Growth Fund, TreDs பிளாட்பார்ம் கட்டாயம் மற்றும் விரிவாக்கப்பட்ட Safe Harbour வரம்புகள் போன்ற அறிவார்ந்த முடிவுகள், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உலகளாவிய போட்டிக்கு தயாராகும். கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான உயர்மட்டக்குழு, 2047–க்குள் உலக சேவை வர்த்தகத்தில் 10% பங்கு இலக்காகக் கொண்டிருக்கிறது, இந்திய இளைஞர்களின் திறனை நம்பிய ஒரு துணிச்சலான பார்வையாகும்." "பாரத்–விஸ்தார், பள்ளிக் கல்வியில் AI அறிமுகம் போன்ற நடவடிக்கைகள் அடுத்த தலைமுறையை அறிவு சார்ந்த சொத்து உருவாக்கும். இன்னும், R&D முதலீடு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியது அவசியம். மொத்தத்தில், இந்த பட்ஜெட் AI, கிளவுட் சோவர்னிட்டி மற்றும் டிஜிட்டல் தளங்களின் மூலம் இந்தியாவின் புத்திசாலித்தனமான வளர்ச்சிக்கான வலுவான வரைபடமாக உள்ளது."

## புதுச்சேரியில் முத்தூட் கோல்ட் பாயிண்ட் புதிய கிளை தொடக்கம்!



புதுச்சேரி , பிப். 03–

முத்தூட் பப்பாச்சன் குழுமத்தின் மதிப்புமிக்க உலோகப் பிரிவான முத்தூட் எக்சிம் (பி) லிமிடெட், புதுச்சேரியில் தனது 87வது முத்தூட் கோல்ட் பாயிண்ட் கிளையை தொடங்கியுள்ளது. காமராஜ் வீதி, லெ ராயல் பார்க் ஹோட்டலுக்கு எதிரில் அமைந்துள்ள இந்த மையம், புதுச்சேரியில் தொடங்கப்பட்ட நிறுவனத்தின் முதல் கிளையாகும்.

இந்த கோல்ட் பாயிண்ட் மையம் மூலம், பொதுமக்கள் பயன்படுத்தாமல் உள்ள பழைய தங்க நகைகளை பாதுகாப்பான, முழுமையாக வெளிப்படையான முறையில் விற்று பணமாக மாற்றிக் கொள்ளலாம். தங்கத்தின் மதிப்பீடு வாடிக்கையாளர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படுகிறது. ரூ.10,000 வரை உடனடி ரொக்கம் வழங்கப்படும்; அதற்கு மேற்பட்ட தொகைகள் IMPS, NEFT, RTGS மூலம் செலுத்தப்படும்.

தொடக்க விழாவில், முத்தூட் பப்பாச்சன் குழுமத்தின் நிர்வாக இயக்குநரும் முத்தூட் எக்சிம் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநருமான திரு. தோமஸ் முத்தூட் மற்றும் முத்தூட் எக்சிம் தலைமை நிர்வாக அதிகாரி திரு. கையூர் ஷா ஆகியோர், தங்க மறுசுழற்சியை எளிதாகவும், நம்பகமாகவும் மக்களுக்கு கொண்டு செல்லும் நிறுவனத்தின் நோக்கத்தை வலியுறுத்தினர். 2015ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் தொடங்கிய முத்தூட் எக்சிம், இன்று நாடு முழுவதும் தனது சேவைகளை விரிவுபடுத்தி வருகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

## வேலை வாய்ப்பு
## உச்ச நீதிமன்றத்தில் 152 காலியிடங்கள்!

**Delhi High Court Recruitment 2026**

- **Vacancy: 152**
- **Post Name: Junior Judicial Assistant**
- **Qualification: Any Degree**
- **Selection Process: Preliminary Exam, Mains Exam, Typing Test**

Organization Name: Delhi High Court
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 152 Junior Judicial Assistant/ Restorer Posts
Place of Posting: Delhi
Starting Date: 04.02.2026
Last Date: 23.02.2026
Apply Mode: Online
Official Website: https://delhihighcourt.nic.in/



## அண்ணா நினைவிடத்தில் இபிஎஸ் மரியாதை!

சென்னை, பிப். 03–

முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி, அவரது நினைவிடத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று(03 பிப்ரவரி) மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோவில் ஊராட்சி ஒன்றியம், கொல்லனூர் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நடந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

சினிமா துளிகள்..!

## 2028 வரை கால்ஷீட் ஃபுல்?



ரஜினிகாந்த்,ஓய்வு பெறப்போவதாக வெளியான வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், 2028–ஆம் ஆண்டு வரை அவர் நடிக்கவுள்ள அடுத்தடுத்த பிரம்மாண்ட படங்களின் பட்டியல் மற்றும் கமல் ரஜினி இணையும் மெகா கூட்டணி குறித்த தகவல்கள்.

தற்போது நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் 'ஜெயிலர் 2' (Jailer 2) திரைப்படத்தில் ரஜினிகாந்த் தீவிரமாக நடித்து வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு இந்த மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, 'டான்' பட புகழ் சிபி சக்கரவர்த்தி இயக்கத்தில் ரஜினி தனது 173வது படத்தில் இணையவுள்ளார். இந்தப் படத்திற்கான ஆரம்பக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் படப்பிடிப்பு துவங்கவுள்ளது.

சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு கமல்ஹாசன் மற்றும் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் ஆகிய இருவரும் ஒரே திரையில் தோன்றவுள்ளனர். '' ரஜினிகாந்த் 173' ரிலீசுக்கு பிறகு இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் எனத் தெரிகிறது.

இவை அனைத்திற்கும் மேலாக, 'படையப்பா' படத்தின் இரண்டாம் பாகம் குறித்த தகவல் சமூக வலைதளங்களை அதிர வைத்துள்ளது. இந்தப் படத்தின் கதையை ரஜினிகாந்தே முழுமையாக எழுதி முடித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. ரஜினிகாந்தின் தற்போதைய லைன்–அப் படி பார்த்தால், அவர் குறைந்தது 2028–ஆம் ஆண்டு வரை சினிமாவில் மிகத் தீவிரமாகச் செயல்படப்போகிறார்.



# திண்டிவனத்தில் பிப்.4-ல் என் கனவு-என் எதிர்காலம் திட்டம்- மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

திண்டிவனம், பிப். 03–

திண்டிவனத்தில் 'என் கனவு–என் எதிர்காலம்' திட்டத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிப். 4–ல் தொடங்கி வைக்கிறார்.

தமிழகம் முழுவதும் 2025 ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் முகாம் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டது.



மொத்தம் 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்ட நிலையில் அந்த முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் அடிப்படையில் 1.80 லட்சம் பயனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்ட பயன்கள் வழங்கும் விழா 'என் கனவு–என் எதிர்காலம்' இணையதள தொடக்க விழா மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் முடிவுற்ற பணிகள் தொடக்கவிழா, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா நாளை (புதன்கிழமை) நடைபெறுகிறது.

திண்டிவனம்–செஞ்சி சாலையில் கொள்ளார் கிராமத்தில் உள்ள சிப்காட் வளாகத்தில் நடைபெறும் விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பங்கேற்று நலத் திட்ட பயன்களையும், சமூக பாதுகாப்பு திட்ட பயன்களையும் வழங்கி என் எனவு–என் எதிர்காலம் என்ற திட்டத்தில் இளைஞர்களின் கனவுகளை பதிவு செய்ய உருவாக்கப்பட்டுள்ள இணைய தளத்தை தொடங்கி வைத்து பேசுகிறார்.

இதனை தொடர்ந்து உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளையும் மு.க. ஸ்டாலின் வழங்குகிறார்.

விழாவில் பங்கேற்பதற்காக சென்னையிலிருந்து நாளை காலை சாலை மார்க்கமாக புறப்பட்டு வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு விழுப்புரம் மாவட்ட எல்லையில் தி.மு.க. சார்பில் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்த வரவேற்பை தொடர்ந்து திண்டிவனம் தீர்த்த குளத்திலிருந்து செஞ்சி சாலை காந்தி திடல் வரை ரோடு ஷோ மேற்கொள்ளும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விழா நடைபெறும் பகுதியை சென்றடைகிறார். அரசு விழா முடிவடைந்த பின்னர் சாலை மார்க்கமாக மீண்டும் சென்னைக்கு முதலமைச்சர் புறப்பட்டு செல்கிறார். முதலமைச்சர் வருகையையொட்டி விழா நடைபெறும் பகுதி, திண்டிவனம் பகுதிகள், முதலமைச்சர் வரும் வழித்தட பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.94 திருநகர் அண்ணா பூங்கா வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அறிவியல் பூங்காவினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் ஸ்வேதா, சிவா, ரவிச்சந்திரன், விஜயா, இந்திராகாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# சத்துணவு ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம்!

மதுரை, பிப். 03–

சத்துணவுத்துறையில் அமைப்பாளர்கள், சமையல் உதவியாளர்கள் என 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணி புரிகின்றனர். இத்துறையில் பல ஆண்டுகளாக 40 சதவீத காலிப்பணியிடங்கள் உள்ளதால் பணிப்பளுவுடன் பணியாற்றுகின்றனர். தங்களையும் அரசு ஊழியராக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். கோரிக்கைகள் பலவற்றை



அரசு இன்னமும் கண்டு கொள்ளவில்லை என்றுகூறி, இன்று முதல் காலவரையற்ற போராட்டம் நடத்துகின்றனர். மாவட்ட தலைநகரங்களில் தினமும் மறியல் நடத்தவும் ஏற்பாடு நடக்கிறது.

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், ஐ.சி.டி.எஸ்., மற்றும் உதவியாளர்கள் சங்கம், தமிழ் மாநில அங்கன்வாடி உதவியாளர்கள் சங்கம், ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம் உட்பட 6 சங்கங்களின் கூட்டமைப்புகள் நேரடியாக களமிறங்குகின்றன. இதனால் நாடு முழுவதும் சத்துணவு, அங்கன்வாடி பணிகள் பாதிக்க வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் நூர்ஜஹான் கூறியதாவது: ஓய்வூதியம் மாதம் ரூ.2 ஆயிரமே தருகின்றனர். ரூ.6750 கேட்டும், அமைப்பாளர்களுக்கு ரூ.3400, சமையல் உதவியாளர்களுக்கு ரூ.3 ஆயிரம் தருவதாக கூறியுள்ளனர். ஒட்டுமொத்த கருணைத் தொகையாக அமைப்பாளருக்கு ரூ. ஒரு லட்சம், உதவியாளருக்கு ரூ.50 ஆயிரம் தருகின்றனர். அவற்றை முறையே ரூ.10 லட்சம், ரூ.5 லட்சம் கேட்டோம். அரசும் முறையே ரூ.2 லட்சம், ரூ. ஒரு லட்சம் தருவதாக கூறுகிறது.

அரசு ஊழியர்களுக்கு ஓராண்டும், எங்களுக்கு 6 மாதமும் மகப்பேறு விடுப்பு தருகின்றனர். ஓய்வு பெற்றோர் இறந்தால் ஈமக்கிரியை நடத்த ரூ.25 ஆயிரம் வேண்டும் என்றோம். ஆனால் ரூ.20 ஆயிரமே தருவோம் என்கின்றனர். தகுதியுள்ள அமைப்பாளர்களுக்கு அரசு துறைகளில் இளநிலை உதவியாளர், சமையல் உதவியாளருக்கு அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்க கேட்டோம். இதனை கண்டு கொள்ளாமல் கேட்பது ஒன்று; கிடைப்பது ஒன்றாக இருக்கிறது. எனவே இன்று முதல் காலவரையற்ற போராட்டம், தினமும் மறியல் நடத்த உள்ளோம் என்றார்.

# அரசியல் தலைவர்களுக்காக தயாராகும் பிரசார வாகனங்கள்!

சென்னை, பிப். 03–

தமிழக சட்டசபை தேர்தல் மே மாதம் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கான தேதியை மார்ச் முதல் வாரத்தில் தேர்தல் ஆணையம் அறிவிக்க உள்ளது.



இதையொட்டி அனைத்து கட்சிகளும் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகளில் மும்ரமாக ஈடுபட்டு உள்ளன. அதன்பிறகு கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் சினிமா நட்சத்திரங்கள் ஆகியோர் வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் தீவிர சுற்றுப்பயணத்தில் ஈடுபட ஆயத்தமாகி வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 234 சட்டசபை தொகுதிகளில் 12,582 ஊராட்சிகள் மற்றும் 16 ஆயிரம் கிராமங்கள் உள்ளன. எனவே அரசியல் கட்சி தலைவர்கள், தலைமை கழக பேச்சாளர்கள், கொள்கை பரப்பு செயலாளர்கள் மற்றும் சினிமா நட்சத்திரங்கள் ஆகியோர் மாநில அளவிலான அனைத்து பகுதிகளுக்கும் நேரடியாக சென்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளனர்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு சுமார் 30–40 நாட்களுக்கு இந்த பிரசாரம் நடைபெற உள்ளது. மேலும் அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் சினிமா பிரபலங்கள் அதிகபட்சம் 2 ஆயிரம் கி.மீ. வரை வாகனங்களில் சென்று தேர்தல் பிரசாரம் செய்யும் நிலை உள்ளது. இதனால் தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் அதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதி களுடன் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. கோவை சிவானந்தா காலனியில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் தேர்தல் பிரசாரத்துக்கான வாக னங்களை பல்வேறு அதிந வீன வசதிகளுடன் பிரத்தியேகமாக வடிவமைத்து வருகிறது. இதற்கான பணிகளில் அந்த நிறுவனத்தை சேர்ந்த ஊழியர்கள் மும்முரமாக ஈடுட்டு வருகின்றனர். மேலும் சட்டசபை தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரசார வாகனங்களுக்கான ஆர்டர்களும் பெறப்பட்டு உள்ளன.

ஒரு பிரசார வாகனம் தயாரிக்க 20 முதல் 40 நாட்கள் வரை ஆகும் என்பதால் இப்போதே பல்வேறு கட்சிகள் சார்பில் வாகனங்கள் முன்கூட்டியே கொண்டுவந்து விடப்பட்டு உள்ளன. இந்த வாகனங்கள் அங்கு பிரிக்கப்பட்டு தேர்தல் பிரசாரத்திற்கு ஏற்ப பிரத்தியேக வசதிகளுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இந்த வாகனத்தின் உட்புற கட்டமைப்புகள், தலைவர்கள் அமரும் வசதி, ஹைட்ராலிக் ஏணி மூலம் வாகனத்தின் மேல் வந்து உரையாற்றும் வசதி, வாகனத்தில் இருந்தபடி வெளியில் உள்ள கூட்டங்களை கண்காணிப்பதற்காக அகன்ற டி.வி.யுடன் இணைக்கப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் போன்ற வசதிகள் செய்யப்படுகின்றன.

மேலும் அந்த வாகனத்திற்குள் தலைவருடன் 3–5 நிர்வாகிகள் மற்றும் உதவியாளர்கள் அமர வசதியாக குஷன் இருக்கைகள், படுக்கை வசதி, போன்றவையும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல ஒருசில பிரசார வாகனங்களில் சமைப்பதற்கான பேன்ட்ரி யார்டு மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யப்படுகின்றன. தேர்தல் பிரசார வாகனத்திற்கு உள்ளேயே "பேக்ஸ், பிரிண்டர் எந்திர வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

தேர்தல் பிரசார வாகனங்களில் தலைவர்கள், நீண்ட தூரம் செல்ல வேண்டி இருப்பதால் குண்டும் குழியுமான ரோடுகளில் "அலுங்காமல் குலுங்காமல்" செல்லும் வகையில் "ஏர் சஸ்பென்ஷன்" வசதி செய்யப்படுகிறது.

அதேபோல பெண் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் நடிகைகள் பயன்படுத்துவதற்கான பிரசார வாகனங்களும் மும்முரமாக தயாராகின்றன. இந்த வாகனங்களில் கழிப்பறை, உடை அலங்கார பகுதி போன்ற சிறப்பு வசதிகளை செய்து தர வேண்டியது உள்ளது. எனவே ஆர்டர் செய்யும்போதே பெண் தலைவர்களுக்கான வாகனமா என்று கேட்டு அதற்கேற்ப சொகுசு வசதியுடன் பிரசார வாகன உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது.

தேர்தல் சுற்றுப்பயணத்தில் பிரசார வாகனங்கள் மிகவும் முக்கியமானவை என்று தனியார் நிறுவன உரிமையாளர் ரியாஸ் கூறுகிறார், இவர் மேற்கண்ட பணிகளில் கடந்த 50 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார். இது குறித்து அவர் கூறியதாவது:–

எனது தந்தை காலத்தில் தொடங்கி தற்போது வரை அரசியல் கட்சி தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் நடிகர்களுக்கு தேர்தல் பிரசார வாகனங்களை செய்து வழங்கி வருகிறோம். தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களுக்கும் தேர்தல் பிரசார வாகனங்களை தயார் செய்து கொடுத்து வருகிறோம்.

ஒவ்வொரு கட்சிகளும் அவரவர் வசதிக்கு ஏற்ப வாகனத்தில் வசதிகளை செய்து தர கூறுவார்கள். அவற்றை சரியாக செய்து கொடுக்க வேண்டும். பிரசார வாகனத்தில் தலைவர்கள் மிகவும் எதிர்பார்ப்பது, சாலையில் செல்லும்போது வாகனம் குலுங்க கூடாது என்பதுதான். ஏனெனில் சில தலைவர்கள் 2 ஆயிரம் கிலோமீட்டர் வரை சென்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வேண்டியது உள்ளது.

மேலும் அந்த வாகனத்தில் உள்ள ஆடியோ வசதி மற்றும் போகஸ் விளக்குகள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். மேலும் கேமிரா வசதிகள் மற்றும் வாகனம் பழுது ஏற்படாமல் எப்போதும் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியம். பிரசார வாகனத்திற்கு உள்ளே இருபுறமும், ஏ.சி. வசதி செய்து கொடுப்போம்.

நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும் என்பதால் வாகனங்களை மிகச் சிறப்பாக தயார் செய்து கொடுத்து வருகிறோம். அதேபோல தற்போது "கேரவன்கள் பயன்பாடு அதிகரித்து உள்ளது. சுற்றுலா செல்பவர்கள், வசதியானவர்கள் வெளியில் செல்வதற்கு கேரவன் போன்ற வசதி நிறைந்த வாகனங்களை பயன்படுத்த தொடங்கி உள்ளனர். இதனால் அனைத்து வசதிகளுடன கூடிய சொகுசு வாகனங்களின் தேவை தற்போது பொதுவாகவே அதிகரித்து வருகிறது.

பிரசார வாகனம் தயாரானதும் அந்தந்த கட்சி தலைவர்களின் படங்கள், கட்சி சின்னங்கள் மற்றும் கூட்டணி கட்சி கொடிகள், சட்டசபை தேர்தலுக்கு அந்த கட்சி அறிவித்திருக்கும் கொள்கை லோகோ ஆகியவையும் பிரசார வாகனத்தில் பெயிண்டிங் செய்யப்பட்டு இறுதி வடிவம் பெற்று சம்பந்தப்பட்ட அரசியல் பிரபலங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றார்.

# 50 ஆண்டுகளுக்கு பின் நிலவுக்கு பயணம்; 'கவுன்ட் டவுன்' துவங்கியது நாசா!

கேப் கனாவெரல், பிப். 03–

அமெரிக்காவில் இருந்து, 50 ஆண்டுகளுக்கு பின் மனிதர்களை நிலவுக்கு சுமந்து செல்லும், 'ஆர்டெமிஸ் – 2' விண்கலத்தின், 'கவுன்ட் டவுன்' ஒத்திகையை நாசா துவக்கியது. கடந்த 1972ம் ஆண்டுக்கு பின், நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் முயற்சியில், அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா ஈடுபட்டுள்ளது. இதன் ஒருபகுதியாக, நிலவுக்கு அனுப்பப்படும் ராக்கெட்டில் எரிபொருள் நிரப்புவதற்கான இரண்டு நாள் கவுன்ட் டவுன் ஒத்திகை நேற்று முன்தினம் துவங்கியது.



ராக்கெட் மற்றும் விண்கலம், மனிதர்களை சுமந்து செல்ல பாதுகாப்பானது தானா என்பதை உறுதிப்படுத்தும் கடைசி மற்றும் மிக முக்கியமான சோதனை இது. ஏவுதலுக்கு முன்பே அனைத்து தொழில்நுட்ப கருவிகளும் சரியாக செயல்படுகிறதா என்பது இந்த ஒத்திகையின் போது உறுதி செய்யப்படும்.

இன்ஜின்களை மட்டும் இயக்காமல், மற்ற எல்லா பணிகளையும் ஒருமுறை ஒத்திகை பார்த்து உறுதி செய்து கொள்வதற்காகவே இந்த கவுன்ட் டவுன் துவங்கப்பட்டுள்ளது. இந்த சோதனையின் முடிவைப் பொறுத்தே, நிலவுக்கு செல்லும் விண்வெளி வீரர்கள் நான்கு பேரின் பயணம் எப்போது துவங்கும் என்பது தீர்மானிக்கப்படும்.

நிலவுக்கு செல்லவுள்ள கமாண்டர் ரீட் வைஸ்மேன் மற்றும் அவரது குழுவினருக்கு கிருமி தொற்று ஏற்படாமல் இருக்க தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஒத்திகை வெற்றி பெற்றால், வரும் 8ம் தேதி விண்வெளி வீரர்களுடன் ராக்கெட் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்பல்லோ திட்டத்தின் கீழ், கடந்த 1968 முதல் 1972 வரை 24 விண்வெளி வீரர்களை நாசா நிலவுக்கு அனுப்பியுள்ளது. இவர்களில் 12 பேர் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கினர்.

# 'டபுள்' என்ஜின்.. 'டப்பா' என்ஜின்.. 'டாப்' என்ஜின்: தேர்தல் நேர அரசியல் பேச்சு ஓட்டாக மாறுமா?

சென்னை, பிப். 03–

தேர்தல் என்பது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரசியல்வாதிகளுக்கு இடையே நடத்தப்படும் பரீட்சை. எப்படி, பாடப்புத்தகங்களை படித்த மாணவர்கள் இடையே தேர்வு நடத்தி ஆசிரியர்கள் மதிப்பெண் வழங்குகிறார்களோ, அதுபோல மக்கள் மனங்களை கவர்ந்த அரசியல்வாதிகள் யார்? என்பதை அடையாளம் காண, தேர்தலில் களம் காணச் செய்து, மக்களே ஓட்டு மூலம் மதிப்பெண்களை வழங்குகிறார்கள்.

அதிக மதிப்பெண், அதாவது அதிக



அளவில் ஓட்டு வாங்கியவர்களே வெற்றி பெறுகிறார்கள். இப்போது, தமிழ்நாட்டில் 17–வது சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலை எதிர்கொள்ள கடந்த 6 மாதங்களுக்கு முன்பே ஆளுங்கட்சியும், ஆண்ட கட்சியும் (எதிர்க்கட்சி) தயாராகிவிட்டன.

**தேர்தல் நேர அரசியல்**

'தினம் ஒரு திட்டம்' என்ற அடிப்படையில் ஆளுங்கட்சி ஒவ்வொரு நாளும் புதிய புதிய திட்டங்களை தொடங்கிவைத்து மக்கள் மனங்களில் இடம்பிடிக்க பார்க்கிறது. மற்றொரு புறம், மக்களுக்கான பிரச்சினைகள் என்னென்ன? என்பதை எதிர்க்கட்சிகள் கண்டறிந்து, ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை முன்னெடுத்து மக்களுடன் இருப்பது போல் காட்டிக்கொள்கிறது. இதுதான் தேர்தல் நேர அரசியல். இந்த நேரத்தில் அரசியல் மேடைப் பேச்சுகளில் அனல் பறக்க தொடங்கிவிடும். அப்படித்தான் இப்போது தமிழக அரசியலில், 'டபுள்' என்ஜின், 'டப்பா' என்ஜின், 'டாப்' என்ஜின் என்று 'என்ஜின்' அரசியல் சூட்டை கிளப்பி வருகிறது.

**டப்பா என்ஜின் ஓடாது**

கடந்த மாதம் 23–ந் தேதி சென்னையை அடுத்த மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திரமோடி, "பா.ஜ.க. – அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் டபுள் என்ஜின் சர்க்கார் தமிழ்நாட்டிற்கு தேவை" என்று பேசி அரசியலில் சூட்டை கிளப்பினார். அதனால் எழுந்த அனலை மேலும் கிளறிவிடும் வகையில், கடந்த மாதம் 25–ந் தேதி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய தமிழக முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின், "டபுள் என்ஜின் என்று சொல்லி வடமாநில மக்களை ஏமாற்றி, அவர்களது வாழ்வாதாரத்தை அழிக்கின்ற உங்கள் டப்பா என்ஜின் தமிழ்நாட்டில் ஓடவே ஓடாது" என்று பதிலடி கொடுத்தார்.

**ஒரு விரல் புரட்சி**

இந்த சூடு தணிவதற்குள், நேற்று நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் 3–ம் ஆண்டு தொடக்க விழாவில் பேசிய அக்கட்சியின் தலைவர் விஜய், "இந்த டப்பா என்ஜின், ஓட்டை என்ஜின் என எவ்வளவு என்ஜின் வந்தாலும், டாப் என்ஜின் நமது கட்சி தான் என்பதை மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்" என்று அதிரடியாக கருத்து தெரிவித்தார். இப்படி என்ஜின் அரசியல் இப்போது தமிழ்நாட்டில் அனல் கக்கும் நிலையில், அந்த 3 என்ஜின்களுக்கான சாவிகள், தேர்தல் அன்று 'ஒரு விரல் புரட்சி' மூலம் மதிப்பெண் அளிக்கப்போகும் மக்கள் கைகளில்தான் இருக்கின்றன. எந்த என்ஜின் சாவியை யார் கையில் கொடுக்கப்போகிறார்கள்? என்பது, தீர்ப்பு வரும் நாளான, அதாவது தேர்தல் முடிவு வெளிவரும் அன்று தெரிந்துவிடும்.

# மீண்டும் உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, பிப். 03–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.640 உயர்ந்து ரூ.1,12,240–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.14,030–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை உயர்ந்தநிலையில் வெள்ளி விலை இன்று குறைந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.20 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.280–க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 80 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது.

# கரூர் வழக்கு: திருச்சி கோர்ட்டில் 12-ந் தேதிக்குள் சிபிஐ சார்பில் குற்றப்பத்திரிகை தாக்கல்?



திருச்சி, பிப். 03–

கரூர் சம்பவம் தொடர்பாக வருகிற 12–ந் தேதிக்குள் கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக சி.பி.ஐ. சார்பில் திருச்சி தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது. இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான பணிகளை தற்போது சி.பி.ஐ. தொடங்கி உள்ளதாகவும் கூறப்படுகிறது. இதன்மூலம் கரூர் கூட்ட நெரிசல் வழக்கு இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.


## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020